**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின்**
**இணை செயல்முறைகள், சென்னை–6**
**ந.க.எண். 001446 / பிடி1 / இ1 / 2022, நாள்.13.05.2022**

பொருள்: பள்ளிக்கல்வி – கோடை விடுமுறை – 2021–2022 ஆம் கல்வியாண்டிற்கான 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு முடிய பயிலும் மாணவர்களுக்கு 14.05.2022 முதல் கோடை விடுமுறை அளித்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

-----

2021–2022 ஆம் கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு முடிய மாணவர்களுக்கு முழு ஆண்டு தேர்வு 13.05.2022 அன்றுடன் முடிவடைவதால் 14.05.2022 முதல் கோடை விடுமுறை மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. தேர்வு சார்ந்த விடைத்தாள் திருத்தும் பணிகள், மதிப்பெண் பட்டியல் தயார் செய்யும் பணிகள் மற்றும் ஒருங்கிணைந்த மதிப்பெண்களுடன் கூடிய தேர்ச்சி பட்டியல் பதிவேடு தயார் செய்யும் பணிகள் காரணமாக அனைத்து ஆசிரியர்களும் 20.05.2022 முடிய பள்ளிக்கு வருகை புரிதல் வேண்டும் எனவும், அரசு பொதுத்தேர்வு பணியில் பணிபுரியும் ஆசிரியர்கள் தேர்வுகள் முடியும் வரை தேர்வு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. 20.05.2022 முன்னதாகவே மேற்குறிப்பிட்ட பணிகள் பள்ளி அளவில் முடிவுற்றால் அப்பள்ளி ஆசிரியர்கள் பள்ளிக்கு வர தேவையில்லை.
2. வெளிநாடு செல்வதற்காக தடையின்மைச் சான்று (NOC) பெற்றுள்ள ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பணிகளை விரைந்து முடிந்த பின்னர் வெளிநாடு செல்லலாம் எனவும், அவர்கள் தேவைப்படின் 20.05.2022 வரை காத்திருக்க தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

3. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை பொறுத்தவரை பள்ளி வருகைப்பதிவேட்டில் உள்ள மாணவர்களுடைய எண்ணிக்கையும், EMIS-ல் உள்ள மாணவர்களுடைய எண்ணிக்கையும் ஒப்பீட்டு முழு பதிவுளை மேற்கொள்ள வேண்டும். இவற்றில் ஏதாவது வேறுபாடு இருப்பின் அவற்றை சரிசெய்த பின்னர் உரிய சான்றிதழை வட்டாரக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்கமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. 14.05.2022 சனிக்கிழமை அன்று பள்ளி விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 2022-23 ஆம் புதிய கல்வியாண்டிற்கான வகுப்புகள் துவங்கப்படும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

ஓம்//க.அறிவொளி
தொடக்கக்கல்வி இயக்குநர்

ஓம்//க.நந்தகுமார்
பள்ளிக் கல்வி ஆணையர்

//ஆணைப்படி//

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல் :

1. இயக்குநர், மெட்ரிக் பள்ளி இயக்ககம், சென்னை-6.
2. இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6
3. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
4. சென்னை-9, பள்ளிக் கல்வித் துறை, அரசு முதன்மைச் செயலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. சென்னை-6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.